


உள்ளே:

வேண்டாம் இந்த விபரீதம்

மாற்றுக திட்டத்[illegible]

ஜமீன் சாய்[illegible]

பிராயச் சித்தம் (சிறு கதை)


: காஞ்சி. மணிமொழியார்
ஞ்செழியன், B. A. (Hons.)

திராவிடர் வார வெளியீடு.

தனி இதழ் அணா 1½
ஆண்டுத் தொகை ரூ. 5

சென்னை 27—9—47 சனிக்கிழமை | வீச்சு 7


# நவீன இராமாயணம்!




அந்தக் காலத்தில் திராவிட இனத் துதித்த விபீஷணன் ஆரிய இராமனின் அடிபணிந்து அவனை வழிபட்டு வாழ்ந்தான். இந்தக் காலத்திலும் ஒரு திராவிடரான டி. கே. சி. அன்பர் இராசகோபாலாச்சாரி யாரை வழிபடுவதாக "கல்கி" பத்திரிகை யின் அட்டைப் படம் நமக்குத் தெரிவிக் கிறது. ஏ திராவிட இனமே! சரணாகதி மனப்பான்மை இன்னமும் உன்னைவிட்டு அகல வில்லையா!

---


பெரியார் மலர் ★ போர்வாள் அடுத்த இதழ் மலராக வெளிவரும்.

இரு நிற அட்டைப் படத்துடன் நாவலர் பாரதியார், அறிஞர் அண்ணாதுரை, முருகு. சுப்பிரமணி யன், இராதாமணாளன், தொடர் பன், முடியரசன், இளஞ்செழி யன் மற்றும் பலர் எழுத் தோவியங்களுடன் கூடியது.

பக்கங்கள் 36. விலை அணா 5.

சிறு கதை :

# பிராயச் சித்தம்

[மணிவண்ணன்]

குழந்தைக்கு இரண்டு மூன்று நாட்களாய் உடம்பு சரியாய் இல்லை. அம்மா, அப்பா என்று தெத்தித்தெத்தி கூறி, வீட்டுக்கும் வாசலுக்குமாய்த் தவழ்ந்து கொண்டிருக்கும் குழந்தை "லொக்கு லொக்கு" என்று தொண்டை வலிக்க இருமிக் கொண்டிருந்தது. திடீரென்று நேற்று இரவு இரண்டு மூன்று தடவை வலிவந்து விட்டது. சுரமோ நெருப்புச் சட்டிபோல் காய்கிறது. வீட்டிலோ "அவரும்" இல்லை. அதிக நாட்களாகப் பணத் தொந்தரவும் கூட. கொள்ளை இலாபம் அடைந்த மில் முதலாளியை தொழிலாளர்கள் அதில் சிறிது பங்குக் கேட்டனர். தர மறுத்துவிடவே இவர்கள் வேலைநிறுத்தம் இரண்டு மாதங்களாக நடக்கிறது. பணக்காரனோடு அரசாங்கத்தினரின் ஆள் பலமும் ஆயுத பலமும் சேர்ந்து சொல்ல முடியாத தொல்லைகள். போனவாரம் ஏதோ கூட்டத்திலே தடியடி பட்டு கையெலும்பு முறிந்து போகவே இவர் கட்டுக் கட்டிக் கொண்டார். முந்தாநாள் போலீஸ்காரர்கள் வந்து "ஆட்சேபகரமான அறிக்கைகளைத்" தொழிலாளர்களிடை தந்ததாகக் கூறிக் கட்டோடு இருந்தவரைக் கூட்டிக்கொண்டு போய்விட்டார்கள். இதுமாதிரி நடவடிக்கைகள் சென்ற சில நாட்களாக எங்கள் பக்கம் அதிகமாய் இருக்கவே, அவர் போனது அவ்வளவு கொந்தளிப்பைத் தரவில்லை. இரவெல்லாம் கண்முழித்து பயந்து பயந்து பொழுதை ஓட்டினேன்.

காலை, குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடிப்போனேன். அம்மம்மா! அங்கே எவ்வளவு கூட்டம்! "நாம் தான் ஏழைகள் என்று பார்த்தால் நம்மைவிட ஏழைகள், பிச்சைக்காரிகள், திக்கற்றவர்கள் கூட்டம் கூட்டமாக உலவுகிறார்களே இங்கு! ஐயோ பாவம்!" உன்று என்னையறியாமலே என் வாய் முணுமுணுத்தது. நான் எவ்வளவோ நாழி காத்துக்கொண்டிருந்தேன் "நுழைவுச் சீட்டு" வாங்க. நான்என்ன பணக்காரியா போனதும் வரவேற்புப் பெற! என் காதிலோ மூக்கிலோ கழுத்திலோ கையிலோ தங்கம் தவழ்கிறதா, இல்லையே. வறுமை தானே விளையாடுகிறது பிறகு என்னை யார் சீந்துவார்கள்? பணக்காரருக்குத்தானே இந்த உலகம்? பணம் மோட்சத்திற்கு மட்டுமா வழி செய்கிறது, உலகத்தில் உள்ள சிக்கலான இடங்களில் நுழைவதற்கும் அது தானே பயன்படுகிறது.

கடைசியாக, எப்படியோ, ஏதோ ஒரு வழியாக உள்ளே போனேன். அங்கிருந்த "டாக்டரம்மா" குழந்தை கையைப் பார்த்தார்கள். குழாய் வைத்து மார்பைப் பார்த்தார்கள். "குழந்தைக்குச் சளி, சுரம் உள்ளே வைத்துக் கொள்கிறோம்" என்றும் சொன்னார்கள்.

இன்னும் கொஞ்சம் சீட்டுகள் இன்னும் கொஞ்ச நேரம் காத்திருந்து வாங்கினேன். குழந்தையை, "குழந்தைகள் வார்டாமே" அங்குக் கொண்டு

போய் விட்டேன். ஏதோ ம
திரைகளும் மருந்தும் நர்
மாள் கொடுத்தாள். அங்
குழந்தைகளின் வேதனை மட்
மல்ல, வேடிக்கைகளும் சில க
டேன். ஒருத்தி நர்சம்ம
கிட்ட ஓடி "இவ்வளவு சீக்
இருக்கிற குழந்தையை கீ
இறக்கிட்டாங்க, இதெல்ல
நல்லதா?" என்று கூச்சல்போ
டாள். நர்சம்மாள் இதற்கெ
லாம்பழக்கப்பட்டவர்கள்போ
மெதுவாக "இப்போது வந்
டாக்டர் ஐயங்கார் அத்திம்பே
......மகள். இதெல்லாம் கவ
கொண்டால் முடியுமா?
மைப் போன்ற ஏழைகள் கொ
சம் ஒதுங்கிப்போகிறது நல்ல
தானே அம்மா?" என்று
அவளும் நானும் வாயைத் தி
காமல் 'ஆம்' என்று தலையை
டினோம். அவளும் நானும் ம
டுமா? ஏழைகள் யாராயி
தாலும் வேறென்ன செய்திரு
முடியும்?

ஆஸ்பத்திரியைச் சுற்றிப் ப
க்கலாம். குழந்தை வேத
யைச் சில நாழிகைகள் மற
லாம் என்று கிளம்பினேன்.
குச் சென்றாலும் மருந்
வாசனை! கையில்லாதவ
காலில்லாதவரும், பெ
பெரிய கட்டுக்கள் கொ
டோரும், நோயாளிகளின் மு
கல் சத்தங்களும் இருக்கக்
டேன். டாக்டர்கள், நர்சம்
கள் பேச்சுக் குரல்களும் கே
டேன். வாயிலும் மூக்கி
பஞ்சு செருகப்பட்டு, மே
இரத்தம் தோய்ந்த கட்டு
பல கட்டப்பட்டு, கையை
காலையும் பரப்பியவண்ணம்
மென இருப்பார் சிலரை, ஆப
ஷன் அறைகளிலிருந்து வ
களில் தள்ளிக்கொண்டு போ
தையும் பார்த்தேன.

(11-ம் பக்கம் பார்க்க)

# மாற்றுக திட்டத்தை!

[மெ. சுந்தரம்]

பெற்ற தாயானவள் தன்னைச் ற்றி உடுத்திக்கொள்ள ஆடை இல்லாமல் தவிக்கும் பொழுது, கன், காசியில் ஆடைத்தானம் செய்தானும் என்று உலகத்திலே ளனச் சிரிப்புடன் ஓர் உரை றப்படுவதை நாம் அறிவோம். ாதாரண மக்கள் வாழ்க்கையில் டைபெறும் இது, இப்பொ ழுது சர்க்கார் நிகழ்ச்சிகளில் டைபெறுவது நகைப்புக்கு இடமாகிறது.

வந்தவர்களுக்கெல்லாம் வாழ இடங் கொடுத்ததால்தான் தமி ர் வாழ்வு தாழ்ந்தது என்பதை ாம் உரைக்கவில்லை, வரலாறு ரைக்கின்றது. சொந்தச் கோதரர்கள் அனலிடைப் ட்ட புழுப்போலச் செந்தமிழ் ட்டிலே மனம் நொந்து, நந்து, மாண்டு கொண்டிருக் நம் பொழுது வட நாட்டவரை ரவேற்கிறோ', மடைமையின் றிகுறியாக.

பாஞ்சாலத்தில் இருந்து, சன்னை சர்க்கார் அந்நாட்டு மக் ளை அகதிகள் என்று பெயர் ட்டி எதிர்கொண்டு வரவேற் ன்றனர். அகதிகளாய் வரு வர்களுக்கு மிகுதியும் இடம் காடுத்தால், தம் தகுதியை யர்த்திக் கொள்வார்கள்; யர்த்துவதோடு அல்லாமல் மிழ் நாட்டவரைத் தாழ்த்த ம் செய்வார்கள் என்பதைக் ல் வெட்டில் எழுதியது பாலச் சென்னை—சௌகார் பட்டை செப்புகிறது. வந்த ர் வடநாட்டுச் சௌகார்கள் ணிபம் கருதி. வளம் காழித்த தமிழ் நாட்டைப் லை யாக்கி, வடநாட்டைச் ாலையாக்கினர். ஏற்றுமதி துதியாயிற்று; இறக்குமதி இல்லையாயிற்று. ஏன்? வந்தவர்க்கு இடம் கொடுத்தோம்; தந்திரமாய்ப் பிழைத்து நம்மைத் தரித்திரர் ஆக்கிவிட்டார்கள். நாம் கேண்மை பூண்டோம்; அவர்கள் கேடு சூழ்ந்தார்கள். வாழவைத்தோம்; நம்மைத் தாழ வைத்தார்கள். நல்லவர் என்று நினைத்தோம்; அவர்கள், நமக்குப் பொல்லாங்கு தேடுகின்றனர். தமிழ் நாட்டில் குடியேற இடம் கொடுத்தோம்; தமிழ் நாட்டின் ஒரு பகுதிக்குத் தங்கள் பெயரையே இட்டு, அது தங்கட்குச் சொந்தமென வாதாடுகின்றனர். சூது அறியாத் தமிழரை வாதாடி வெல்ல நினைக்கின்றனர், வந்த வடநாட்டுத் தந்திரக்காரர்கள். சிந்தனை இல்லாமல் செந்தமிழ் நாட்டில் நுழைய வைத்தோம்; வந்தது தொந்தரவு அவர்களால். நாடே அவர்களுடையது என்ற அளவுக்கு அவர்கள் ஆணவம் அதிகரித்து விட்டது.

இதேமாதிரி நிலைதான், இனி மேலும் வரப்போகின்றது, தமிழ் நாட்டவருக்கு. பஞ்சாப் மாகாணத்தில் இருந்து பத்தாயிரக் கணக்கான அகதிகளைச் சென்னைச் சர்க்கார் வரவேற்று, அவர்களுக்கு உணவும் உடையும் கொடுக்கப் போகிறது. இதற்கு ஒரு இலட்சரூபாய் ஒதுக்கி இருக்கிறது. பஞ்சையாய் வருகின்ற பஞ்சாபியர், நஞ்சையும், புஞ்சையும் விளைந்து நிலவளம் சிறக்கும் செந்தமிழ் நாட்டைப் பார்ப்பர், சிந்தனைக்கு வேலை கொடுப்பர்; "ஏன் இங்கேயே தங்கிவிடக்கூடாது? நீர்வளம், நிலவளம் அனைத்தும் இருக்கின்றன; தங்கச் சுரங்கமும் மங்காத உழைப்பும் மக்களிடம் உண்டு; ஓடும் புனலும் உயர்ந்த மலைகளும் உள்ளத்திற்கு அமைதியையும், உழைப்பிற்குப் பயனையும் தருகின்றன; மக்களோ, இன உணர்ச்சி இல்லா மன நலம் உடையவராய் இருக்கின்றனர்; ஆகையால் இவர்களை ஏமாற்றி, நாம் ஏக போக உரிமைகொண்டாடி வாழலாம்; ஏகாதிபத்தியம் செலுத்தலாம்" என்றெல்லாம் எண்ணுவர். இந்த நிலைமையில் நம் தமிழ் நாடு எப்படிக் காட்சியளிக்கிறது?

பஞ்சம் நம் நாட்டில் தஞ்சமாகப் புகுந்திருக்கிறது. பிணி நம்மை அணி செய்கிறது. பொருளாதார முன்னேற்றமோ, புலிப்பாலாக இருக்கிறது. ஊர் ஊராய்ச் சுற்றுகின்ற மந்திரிகள் கூட, "உணவில்லையே; இனி ஒரு கணம் உயிர் நில்லாதே; ஒளித்து வைக்காதீர்; இருப்பது தாரீர்; பதுக்கி வைக்காதீர், மக்களுக்குத் துரோகம் தேடாதீர்" என்று முகாரி ராகத்தில் பல்லவி பாடி, கச்சேரியை முடிக்கின்றனர். நம்மைக் காட்டிலும் அவர்கள் நன்றாக அறிவார்கள், நாட்டு நிலவரத்தை; அறிந்திருந்தும வடநாட்டவர்க்கு இங்கு வாழ இடந்தேடித் தருகின்றனர்; நம் அழிவுக்கு வழி கோலித் தருகின்றனர். இருக்கின்ற மக்கட்கு ஏற்ற வசதியில்லை; என்றாலும் வருகின்ற பஞ்சாபியரை நோக்கி "வாருங்கள், வாருங்கள், கைதாருங்கள்" எனக் களிப்புச் சிந்து பாடுகின்றனர்; கண்ணீர் விட்டுக்கொண்டு உணவுக்கும் உடைக்கும் தமிழன் அலையும் போது எங்கோ இருந்து வந்த வேற்று நாட்டாருக்கு உணவும் உடையும் ஓடியோடித் தருகின்றனர். உறங்கும் தமிழர் கூட்டத்திற்கு இதன் மூலம் எழுச்சியைத் தான் உண்டாக்குகின்றனர்; "இந்த நாட்டில் பிறந்த நான் உணவில்லாமல் உயிரொடுங்கிக் கிடக்கும் பொழுது

அகதிகளாய் வந்த பஞ்சாபியர், அறுசுவை உண்டி உண்டு, அருமையான ஆடை உடுத்தி நகரில் பவனி வருகிறார்களே! நான் வாடும் பொழுது, குடியேறிய இவர்களுக்கு உடையும், உணவும் எங்கிருந்து கிடைத்தன? என்ன இது காலத்தின் கோலம்?" என்று தமிழர் எண்ணத் துவங்கிவிட்டால் என்ன வாகும் நாடு? இந்தச் சூழ்நிலையை அரசியலாரே உண்டாக்கினால், அப்புறம் வண்டமிழ் நாடு வங்காளமாக ஏன் மாறாது? பைந்தமிழ் நாடு பாஞ்சாலமாக ஏன் காட்சி அளிக்காது? நற்றமிழ் நாடு நவகாளியாக ஏன் தோற்றாது? "வாழ்ந்தவன் வயிற்றுக்கும் இல்லாமல் சாக, வந்தவன் ஏக போக மிராசு நடத்துவதா?" என்ற எண்ணந்தானே எந்த நாட்டிலும் மக்கள் மன்றம் கொந்தளிக்க இடம் தருகிறது? மகாத்மாக்களை மாதக்கணக்கில் உண்ணாவிரதம் இருக்கச் செய்கிறது; கூட்டறிக்கைகளை மக்களிடம் நீட்டச் செய்கிறது? ஏன் இந்தத் தொல்லை? வீணே போகின்ற சனியனை ஏன் விலை கொடுத்து வாங்கவேண்டும்? அரசியலார்தானே, தங்கள் தகாத செயலால், மக்கள் மனதில், மன முரணையும் அது காரணமாக இனம், நாடு, மொழி வேறுபாட்டையும் வளர்க்கின்றனர்? ஏன் இத்தகு செயலில் அவர்கள் ஈடுபடவேண்டும்?

தமிழ் நாட்டார் உணவும், உடையும் இல்லாமல் உயிர்விட, வந்த பஞ்சைகளாகிய பாஞ்சாபியர் உண்டு கொழுத்து உலவுவதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த திருவள்ளுவர்கூடக் கண்டிக்கிறார்; கண்டிப்பதோடு மட்டுமல்ல; அவர்களை ஆதரிப்பவரைப் "பேதை" என்ற பெரும் பெயர் சூட்டுகிறார்.!

"ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை பெரும் செல்வம் உற்றக்கடை" என்று திருவள்ளுவர், மாற்றாருக்கு இடமளிக்கும் மந்திரிகள் மனதில் தைக்கும்படி அழகாக் கூறுகிறார்". "பேதையானவன் பெருஞ் செல்வம் அடைந்தால், அயலார் எல்லோரும் வயிறு நிறைய உண்டு களிப்பர்; ஆனால், அவனுடைய சொந்த உறவினர்கள்—இனமக்கள்—தாய்தந்தை தெருவில் நிற்பர்" என்பதே இதன் பொருள்.

தமர் ஆகிய தமிழ் நாட்டார் பசிப்பிணியால் வாடுகின்றனர்; ஏதிலாராகிய பஞ்சாபியர் எல்லா வசதிகளும் பெற்றுவாழ்கின்றனர். வள்ளுவர், தான் வாழ்ந்தகாலத்திலேயே, வரப்போகின்ற தமிழ்நாட்டில் நடக்கும் "துக்லக்" ஆட்சியை நன்கு அறிந்திருக்கிறார். அல்லவா?

ஆதலால், நெஞ்சு தடிக்கும் செயலை.—பஞ்சாபியரை ஏற்றிப் போற்றலை—சென்னை அரசாங்கம் மேற்கொண்டிருப்பது உணர்ச்சியில்லாத தமிழரையும் உணர்ச்சிகொள்ளச் செய்கிறது; இந்த உணர்ச்சிதான், "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற கொள்கையாக—உரிமை முழக்கமாக உருவாகிறது! இதை உணரட்டும் மந்திரிமார்! மாற்றட்டும் தம் திட்டத்தை!

---

## ஜமீன் சாய்கிறது!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இருந்திருக்கிறது. அக்கிரமம் என்ற போதிலும் ஆங்கிலேயர் ஆதரவு இருக்கிறது என்ற ஒரே காரணத்தினால் வசூல் அதிகாரிகள் உரிமையாளராக உலவி வந்தனர் இதுவரை. இனி அந்த நிலை இருத்தலாகாது. ஆங்கிலேயர் ஆதிக்கம் தொலைந்ததும் அவர்களுடன் கூடவே வந்த பல அநீதிகளும் அவர்களுடன் கூடவே போய்விட்டதுபோல இந்த அநீதியும் போக வேண்டியதே.

ஜமீந்தாரி ஒழிப்பு மசோதா இ
நன்னோக்கத்துடன்தான் கொண்
வரப்பட்டிருக்கிறது. நேர்மைக்கு
புறம்பாக ஜமீந்தார்கள் இதுவ
உழவர்தம் நிலங்களைத் தமதென்
உரிமைகொண்டாடியதை மறுத்
அந்த உரிமைக்கு ஆங்கிலேய
வகுத்த சட்டங்கள் பூசிய மு
மைக் கலைத்து, ஜமீன் நிலங்க
பழயபடி உழவரிடம் தந்துவி
வது என்பதே இந்த மசோதாவி
இலட்சியம். சிலர்கூசாமல் கூறு
துபோல, இந்தமசோதாஉரிமை
லாதஉழவர்கட்குஇனமாகஒன்று
நிலங்களை "அன்பளிப்பு" செய்
விட வில்லை. ஒரு காலத்தில் சொ
தக்காரர்களாக இருந்து, பின்
துரைமார் விளைத்த துரோகம் கா
ணமாக அநியாயமாகத் தம் உரி
மை இழந்து, 150 ஆண்டுகள் கூ
களாய்க் கிடந்து, தம் நிலங்க
வசூல் அதிகாரிகள் அவர்களுை
யன என்று உரிமை பாராட்
பலன் பெற்றது கண்டு உள்
குமுறிக் கிடந்த உழவர்களுக்
அவர்களுடைய முன்னாள் நி
களைத் திருப்பித் தருகிறது இ
மசோதா. அவ்வளவுதான்.

இம் மசோதாவை நாம் மு
மனதுடன் வரவேற்கிறோம்—ஒ
ஒரு திருத்தத்துடன். ஜமீன் மு
மை—அதாவது வசூல் அதிகா
கள் நில உரிமையாளராக
ஆண்டுகள் உலவி வந்த அநீதி
ஒழிப்பதோடு நில்லாது, ஜமீ
தார்க்கு ஏறத் தாழ 10 கோடிரூ
நஷ்ட ஈடு தருகிறார்களாம் அரசா
கத்தார். ஏன் இந்த தாராளம் எ
பதுதான் நமக்குப் புரியவில்
உரிமை உடையவனிடமிருந்து ஒ
பொருளைப் பறித்தால் மட்டு
நஷ்ட ஈடு தரலாம்—தர வேண்டு
உரிமையே இல்லாத ஒருவன்
ருக இதுநாள்காறும் நுகர்ந்
வந்த ஒரு பொருளை அவ
மிருந்து பறித்தெடுத்து, அ
உண்மைச் சொந்தக்காரனி
தரும்போது, நஷ்ட ஈடு தரும் பி
சினையே எழ வழியில்லை. நியா
தைச் சொல்வதானால், உழவர்க
டைய நிலங்களைத் தாங்கள் அ
வித்த காரணத்திற்காக ஜமீந்தா
கள் தரவேண்டும் நஷ்ட ஈடு—உ
வர்களுக்கு! அது செயல் மு
க்கு ஒத்ததல்ல, எனவே அந்
பிரச்சினையை நாம் எழுப்பவில்
ஆனால் காரணமின்றி ஜமீந்
கட்கு நஷ்ட ஈடு தருவதை நாம்
புக்கொள்ளமுடியாது.

# ஜமீன் சாய்கிறது!

இன்று ஜமீன் வட்டாரத்தில் கம்பம்! பெரிய பெரிய ஜமீன் ளிலிருந்து சுண்டைக்காய் மீன் வரையில் எல்லாவற்றிற் ம் ஆபத்து! எந்த விநாடியும் மீன்கள் சடசடெனச் சரிந்து ழுந்து விடலாம்—அவ்வளவு லகலத்துப் போய்விட்டன வை, ஜமீன்தாரி ஒழிப்பு சோதாவைக் கண்டு.

ஜமீன்! உச்சரிப்பதற்கே வடிக்கையான பெயர். அதை ட வேடிக்கையான நிலைமை மீனில். வேடிக்கை மட்டுமா? ல்லை, விபரீதமான நிலைமை ட.

களையெடுத்து, நிலத்தைப் ண்படுத்தி, எருவிட்டு, தண் ீர் பாய்ச்சி, விதை தூவி, ழுது பயிரிட்டு வெறும் வயல் ளை வளவயல்களாக மாற்று ான். உழவன். பருவ மழை ருப்பின் மகிழ்ந்து, இல்லை பல் கிணற்று நீர் சேந்தி தைப் பாய்ச்சுவான் நிலத் ற்கு. கண்மணி எனக் காப் ன் நெல் மணிகளை. பருவம் ்ததும் அறுத்துக் குவிப்பான். ற் சுமைகளைக் கட்டுக் கட்டா கொண்டுவந்து குவிப்பான் ளத்தில். பிணையோட்டுவான். ு வைக்கோல் வேறு நெல் வறு ஆகும். அளந்து கொட்டு ன் நெல் மணிகளை மூட்டை ில். அந்த நெல் மூட்டைகள் வனுடைய உழைப்பின் உரு ்கள்.

ஜமீந்தார்—நிலத்துக்கு அவர் ன் உரிமையாளர் சட்டப்படி- வ்வளவும் நடந்து முடிகிற ரை நிலத்தருகில்கூட வரமாட் ர். நிலத்தைப்பற்றி அவர்க் ன்ன கவலை! நெல்மூட்டை தானே வேண்டும் அவர்க்கு! மூட்டைகள் உருவாகிற நேரம் வருவார். உழவனுக்குக் கூலி யென ஒரு சிறு பங்கு கொடுத்து விட்டு, அடுத்த "உழவு"க்கு ஒரு பங்கு நெல் விதைக்காக ஒதுக்கி விட்டு, மற்ற மூட்டைகள் அவ்வளவையும் வண்டிகளில் அடுக்கிக் கொண்டு போய் விடுவார். அதோடு அடுத்த அறுவடைக்குத்தான் களத்து மேட்டிற்கு வருவார் நெல்மூட்டைகள் ஏற்றிப்போக. இடையே அவர் வரமாட்டார். வருவதற்கு அவர்க்கென்ன வேலை இருக்கிறது! அவரென்ன நடுவாரா, உழுவாரா, அறுப்பாரா, விதைப்பாரா, ஒன்றுமில்லை!

உழவன் பெறுவது சிறு கூலி. ஜமீந்தார் பெறுவது எல்லா மூட்டைகளும். ஆனால் வருடம் 365 நாளும், வயல் வெளிகளிலேயே உண்டு, அங்கேயே உறங்கி, அங்கேயே தன் வாழ்க்கையை நடத்தி, வயலுடன் வயலாக உருமாறித் திரிபவன் உழவன். வயலுக்கும் தனக்கும் தொடர்பே அற்று, எங்கேயோ ஓர் இடத்தில் வாழ்ந்து, எப்போதோ ஒரு முறை, மற்ற கோலாகலங்களில் சலிப்புத் தட்டிய நேரம், நிலத்தைப் "பார்த்து விட்டுப்போக" வருபவர் ஜமீந்தார். ஆனாலும் சட்டம் சொல்கிறது உழவன் கூலிக்காரன், ஜமீந்தார் சொந்தக்காரர் என்று.

உழைக்க ஒரு கூட்டமும், உழைப்பின் பயனை உண்டு வாழ ஒரு கூட்டமும் இருப்பது உழு தொழிலில் மட்டுமே அல்ல; எல்லாத் தொழில்களிலும் உள்ள நிலைமைதான்; முதலாளித்துவ அமைப்பின் அரிச்சுவடியே அது தான்; முதலாளித்துவம் பொருளாதார இயந்திரத்தின் அச்சாணியாக உள்ள எல்லா இடங்களிலும் இந்த நிலை இருந்துதான் தீரும்; இது தவிர்க்க முடியாதது; உழைப்பின் பயனை உழைப்பவரே நுகர வேண்டுமாயின் முதலாளித்துவம் முறியடிக்கப்பட வேண்டும். அப்படி முறியடிக்கப் படாதவரை இந்தச் "சாய்ந்த தராசு" தான் எங்கும் "நீதி" செலுத்திவரும். இந்த அநீதி பிற தொழில்களில் இருப்பது போலவே ஜமீன் உழவு தொழிலிலும் இருக்கிறது. ஆனால் நாம் குறிப்பிட விரும்புவது இந்த அநீதியை மட்டுமே அல்ல; இதைவிடப் பயங்கரமானதோர் அநீதியை.

ஜமீந்தாரி நிலங்கள் என்று இன்று அழைக்கப்படுகிற வயற்புறங்கள் உள்ளனவே, அவை இன்று ஜமீந்தாரர்கட்குச் சொந்தம் சட்டப்படி. அவற்றில் உழுது பயிரிடும் உழவர்கள் வெறும் கூலிகள்—இதுவும் சட்டப்படிதான். ஆனால் உண்மை என்ன தெரியுமோ, **உழவர்கள்தான் அந்த நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள். ஜமீந்தாரர்கள் அல்ல.** 1802 வரையில் உழவர்கள்தான் சொந்தக்காரர்கள். ஜமீந்தாரர்கட்கு நிலத்தில் எந்தவித உரிமையும் இருந்ததில்லை. 1802-க்குப் பிறகுதான் ஜமீந்தாரர்கள் அந்த நிலங்களுக்குச் "சொந்தக் காரர்கள்" ஆனார்கள். உழவர்கள் கூலிகளானார்கள்.

அப்படியானால், ஜமீந்தாரர்கள் உழவர்களிடமிருந்து நிலத்தை விலைக்கு வாங்கிக் கொண்டார்களா என்பீர்கள். இல்லை, விலை கொடுத்து வாங்கவில்லை. உழவர்கள் ஜமீந்தார்கட்குக் கொடுக்கவேண்டிய கடன் ஏதேனும் கொடாமலிருந்து அதற்காக ஜமீந்தார்கள் நிலத்தை எடுத்துக் கொண்டுவிட்டார்களோ என்பீர்கள், அதுவுமில்லை. உழவர்கள் நிலங்களை இனாம் கொடுத்துவிட்டார்களோ ஜமீந்தார்கட்கு என்றால் அப்படியுமில்லை.

உழவர்கள் தம் நிலத்தை விலைக்கு விற்கவுமில்லை; வாங்கிய கடனுக்கு ஈடாகக் கொடுத்துவிடவுமில்லை; தானம் 'வழங்கவுமில்லை. என்றாலும் சொந்தக்கார உழவர்கள் கூலிகளானார்கள். சொந்தக்காரர் அல்லாத ஜமீந்தாரர்கள் சொந்தக்காரர் ஆனார்கள்.

என்னப்பா இது, விடுகதை விடுகிறாயே என்பீர்கள் நீங்கள்; நீங்கள் என்ன, இது கேட்கும் யாருமே அப்படித்தான் சொல்வார்

(10-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

27—9—47 சனிக்கிழமை

# வேண்டாம் இந்த விபரீதம்!

"சந்தா சேர்க்காதே!"

"கழகம் அமைக்காதே!"

"அரசியல் பேசாதே!"

"உரிமைக்குப் போராட்டம் விளைக்காதே!"

"எது சரி, எது தப்பு, எது உண்மை, எது பொய் என்றெல்லாம் சிக்கலான பிரச்சினைகளை எழுப்பாதே!"

"மதத்தின் பேரால் நடைபெறும் கொடுமைகளை எடுத்துரைக்க எண்ணுகிறாயா—கூடாது. அது நாஸ்திகப் பிரசாரம்."

"புராணங்களின் பொய்யுரையால் மக்கள் உள்ளத்தில் புகை படிந்த வரலாற்றைப் பிறர்க்குச் சொல்லும் எண்ணமா—செய்யாதே அதை. மதத் துவேஷம் அது!

"ஒரு இனம் மற்றொரு இனத்தை அடக்கியாளல் அடாது; வகுப்புக்கு வகுப்பு ஒத்த உரிமை, ஒத்த வாழ்வு இருத்தல் வேண்டும் என்று சமரச ஞானம் பேசுகிறாயா, வேண்டாம் இந்த வகுப்பு வாதம்."

"எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சு. ஆனால் எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு என்ற நிலை ஏற்படவேண்டாமா என்று தானே கேட்கிறாய். அதெல்லாம் அரசியல்வாதிகளின் அங்கலாய்ப்பு. ஈடுபடாதே அதில்."

நாம் வீசும் சொற்கள் அல்ல இவை; அரசியலார் கட்டளைகள்—மாணவர் உலகிற்கு.

மாணவர்கள் வகுப்பு வெறுப்புப் பிரசாரம் நிகழ்த்துகின்றனராம்; சேதி கிடைத்ததாம் அரசாங்கத்திற்கு; பிறப்பித்து விட்டனர் இந்தப் புது ஆணைகளை!

எத்தகைய அரசியல் அல்லது மத வகுப்புக் கட்சிகளிலும் மாணவர்கள் பங்கு கொள்ளக் கூடாதென்றும், அவற்றிற்கு உறுப்பினர் சேர்ப்பதோ சந்தா வசூலிப்பதோ தவறு என்றும், கல்லூரித் தலைவர்கள் இதில் தலையிட்டு தக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்றும் கல்வித் துறைத் தலைவர் "தாக்கீது" விடுத்திருக்கிறார் கல்லூரிகளுக்கு

"நாம் சொன்னோம் நாஸ்திகப் பிரசாரம் பள்ளிகளில் நடக்கிறதென்று, இதோ—அரசாங்கம் முன் வந்து விட்டது அந்தப் பாதகர்களைப் படுசூரணமாக்க. நாம் சொன்னால் எது நடவாது இந்த நாட்டிலே? பிராமணா மமதே வதா என்பது பொய்யா? இல்லையே! நாம் ஆட்டும் சுட்டுவிரல் கண்டு ஆடுமே இவ் வையம்! இனி என்ன செய்வார்கள் அந்த சூனா மானாக்கள்?" என்று ஆரிய வட்டாரம் இந்த உத்தரவு கண்டு களிப்புக் கூத்தாடுகின்றது. அது மட்டுமா? நம்மைப் பார்த்து ஏளனச் சிரிப்பும் சிரிக்கிறது. அதை நமக்குத் தெரியாமலு மில்லை.

வெள்ளிமணிகளும் தங்கமணிகளும் கொக்கரிக்கின்றன; பாரததேவிகளும் பாதக தேவிகளும் எக்காளமிடுகின்றன; கல்கிகளும் ஆநந்தவிகடன்களும் மகிழ்ச்சித் தெம்மாங்கு பாடுகின்றன; பாடிப் பாடிப் பரவசமுறுகின்றன. சின்னஞ் சிறிய சமூகம் ஒன்று—அது துள்ளிக் குதித்து ஆநந்தப் பள்ளுப் பாடுகின்றது. அடடாவோ அடடா! அந்த வட்டாரத்திற்குத் தான் எவ்வளவு மகிழ்ச்சி இந்த உத்தரவு கண்டு! வேண்டித் தவங்கிடந்த வரம் மிக எளிதில் கிடைத்து விட்டது என்றல்லவோ பூரிப்படைகிறது அக் கூட்டம்!

அவர்கள் மகிழ்ச்சி கிடக்கட்டும் ஒரு புறம்—அத

ற்றி நமக்குக்கவலையில்லை;
து அற்ப மகிழ்ச்சி என்
தை நாம் நன்கறிவோம்;
துபோலவே பல முறை
அவசர மகிழ்ச்சி"
காண்டு பின் வேதனை
வண்பா பாடியுள்ளது
க் கூட்டம்—ஆனால் அர
ங்கம் ஏன் இந்த வாண
வடிக்கையைச் செய்கிறது
ன்பதுதான் நம் கேள்வி.
வறு வேலை இல்லையா
ரசியலார்க்கு இது
விர? என்று தொலை
ம் இந்த அளவரிசி என்று
க்கள் இடும் வேதனைக்
ரல் கேட்கவில்லையா அவர்
ள் காதில்? "பத்து
ழும் துணியாமே! எப்படி
ப்பா போதும் இது"
ன்று வீட்டுக்கு வீடு எழும்
ணு முணுப்பு அவர்கள்
செவி புகவில்லையோ?
உழைக்கிறோம் மாடு
பால் கூலியோ போத
ல்லை; பொருள்களோ
னை விலை குதிரை விலை;
ழ்வதுதான் எப்படி?
ழ்வதுந்தான் ஏதுக்கு?"
ன்று ஆலைத் தொழிலா
ர்கள் உள்ளம் குமுறுகின்
னரே அந்த நெஞ்சு
நாகும் சம்பவத்தைக்
ணக் கண்ணில்லையா
ஜாஜி—காமராஜ்—ஓமந்
ர் கூட்டு ஆட்சிக்கு?
உழைப்பிற்கேற்ற ஊதிய
ல்லையே; தேவைக்கேற்ற
சதிகள் இல்லையே, வசதி
ட வழியும் இல்லையே,
ரசாங்கமோ நம் குறை
யக் கண்ணெடுத்தும்
ர்க்கவில்லையே,
ன்னே எம் வாழ்வு!"
ன்று வாடி வதங்கும்
ந்த ஆரம்ப ஆசிரியர்
ின் அல்லலைத் தீர்க்கும்
ண்ணமில்லா விட்டாலும்

அவர்கள் படும் அல்லலை உணர்ந்து பார்க்கக்கூட நேரமில்லையா இவ் ஆட்சிக்கு? ஏன் உடனடியாகத் தீர்த்துக் கட்டவேண்டிய இத்தனை பிரச்சினைகளையும் மறந்துவிட்டு அரசாங்கம் திராவிடர் கழகம் இருக்கும் திக்கு நோக்கிப் பாய வேண்டும்? நாட்டின் முதுகெலும்பு போன்ற தொழிலாளர்தம் துயர்களையவோ, கல்விக் களஞ்சியத்தின் காவலர்களான ஆசிரியர்களின் அவதியைப் போக்கவோ அவர்களுக்கு ஓய்வு இல்லை; உணவுப் பஞ்சம் வாராமல் தடுக்க வசதி இல்லை; பத்தாயிரம் பஞ்சாபியர் இங்கு வந்து தங்குவதைத் தடுக்க வகையில்லை—ஆனால் மாணவர்கள் மீதும் ஆசிரியர்களின் மீதும் மாறி மாறி அடக்குமுறை ஈட்டிமுனையைக் கூர் தீட்டிக் காட்டுதற்கு மட்டும் நேரமிருக்கிறது, வசதி இருக்கிறது, வழி இருக்கிறது, வகை இருக்கிறது, எல்லாம் இருக்கிறது. என்ன விபரீதமானநிலை!

பசி! பசி! பட்டினி! பட்டினி! என்று நாடெங்கும் எழும் பரிதாபக் குரல் ஓமந்தூரார் செவிக்கு எட்டவில்லை. ஆனால் வெள்ளி மணிகளின் ஆபத்துக்குரல் மட்டும் உடனே எட்டிவிடுகிறது. என்ன விசித்திரம்!

கோயில்களில் ஆரியர்—திராவிடர் வேற்றுமை; சிற்றுண்டிச் சாலைகளில் இருவர்க்கும் வெவ்வேறு இடம்; கல்லூரி விடுதிகளில் பிராமணர்க்கும் அல்லாதார்க்கும் தனித்தனி உணவுக்கூடம்; பல பள்ளிகளில் இரு சாரார்க்கும் தனித்தனி தண்ணீர்ப் பானை; ஊர்க்குளங்களிலும் பொது இடங்களிலும் இன்னமும் "முகத்துதித்தோர்" க்குத் தனிச் சலுகை; சட்டப்படி அவர்கள் "உயர் ஜாதி"; அறங்கூறு மன்றத்தின் ஆணைப்படி அவர்கள் நம் இனத்தவரையோ நம்மவர் அவர்களையோ மணக்கக் கூடாது. இப்படியெல்லாம் இருப்பது வகுப்பு வாதமாகத் தெரியவில்லை அரசாங்கத்திற்கு. இப்படி இருக்கலாமா என்று கேட்பது வகுப்பு வாதமாகத் தென்படுகிறது. என்ன வேடிக்கை!

காங்கிரஸ் கட்சித் தலைவர்களுடைய—அதுவும் இந்நாட்டுத் தலைவர்கள் அல்ல; வடநாட்டுத் தலைவர்களுடைய படங்கள் கல்லூரி மண்டபங்களை அணி செய்யலாம்; அவர்களைப் பற்றிய வாழ்த்துப் பாடல்கள் பள்ளிப் புத்தகங்களில் இடம் பெறலாம்; அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் வகுப்புக்கு வகுப்பு சொல்லிக் கொடுக்கப் படலாம்—இவையெல்லாம் அரசியல் ஆகா. ஆனால் திராவிடநாட்டுத் தலைவர்களுடைய படத்திறப்பு விழாக்களும், அவர்கள் பற்றிய வாழ்த்துகளும், அவர்கள் ஆற்றிய தொண்டுகளை எடுத்துச் சொல்வதும் மட்டுமேதான் அரசியல். சென்னை மாநில அரசாங்கம் செப்புகிறது இது போல!

"ஜெய் ஹிந்த்" சொல்லலாம் மாணவன், நம் நாடு ஹிந்துஸ்தானம் அல்ல, திராவிடம் என்றபோதி

னும்! ஆனால் தப்பித் தவறிக் கூட அவன் திராவிடம் வாழ்க என்றோ தமிழகம் வெல்க என்றோ சொல்லக் கூடாது. சொன்னால் அது வகுப்புவாதக் கட்சியைப் போற்றுஞ் செயலாக முடிந்துவிடும், அமைச்சர் அவினாசியாரின் புது அகராதிப் படி!

"வந்தேமாதரம்" என்று முழங்கலாம் — இஸ்லாமிய மாணவர்கள் இருந்தாலும்; அது அவர்கள் உள்ளத்தைப் புண்படுத்தும் என்று தெரிந்தாலும் ஆனால் திராவிட நாடு திராவிடர்க்கே என்றோ தமிழ்நாடு தமிழர்க்கே என்றோ சொல்லல் ஆகாது; ஆகவே ஆகாது; கொஞ்சம் கூட ஆகாது— அரசாங்கப் புது உத்தரவுப் படி.

கதர் சட்டை அணிந்து கொள்ளலாம்—அது யார் கண்ணையும் உறுத்தாது. ஆனால் கறுப்புச் சட்டையை ஒரு மாணவன் அணிந்து கொண்டால் அதுமட்டும் தவறு! காந்திக்கு ஜே கூறலாம்—அது தேசபக்தி; பெரியார் வாழ்க என்று ஒலிக்கக் கூடாது — அது வகுப்புத் துவேஷம்! தேசீய சங்கங்களில் சேரலாம்; தேசீய மாணவர் சங்கங்கள் அமைக்கலாம்; அவற்றிற்கு உறுப்பினர் சேர்க்கலாம்; நன்கொடை திரட்டலாம் இவற்றில் இம்மியும் பிழையில்லை. ஆனால் திராவிட மாணவர் கழகம் அமைப்பதோ அதற்கு உறுப்பினர் சேர்ப்பதோ அதற்குப் பொருள்வளம் தேடலோ அதற்கு விழா நடத்துவதோ மட்டும் தவறு; தவறு; தவறேதான்!— அதிகார பீடத்தின் நினைப்பு இவ்வண்ணம்.

* * *

"நாடே காங்கிரஸ்; காங்கிரசே நாடு. அரசாங்கமே காங்கிரஸ்; காங்கிரசே அரசாங்கம். ஆகவே வேறு கட்சிகள் நாட்டில் இருக்கக் கூடாது"—இந்த நச்சு மனப்பான்மை ஒரு சாராரிடம் வேகமாக வளர்ந்து வருகிறது. இதற்குப் பெயர் தான் பாசிசம். இந்தப் பாசிச எண்ணங்களைத் தெரிந்தோ தெரியாமலோ வளர்ப்பவர்கள் நாட்டுத் துரோகிகள் — நிச்சயமாக நாட்டுத் துரோகிகள்.

முதலமைச்சர் ஓமாந்தூர் இராமசாமியாரும் கல்வி அமைச்சர் அவினாசிலிங்கனாரும் பாசிசப் போக்கை அடியோடு வெறுப்பவர்கள் என்பது நமக்குத் தெரியும் நன்றாக. அப்படி இருந்தும் நாம் முதலில் குறிப்பிட்ட உத்தரவு பிறந்தது எப்படி என்பதுதான் நமக்குத் தெரியவில்லை. அதற்கு யார் காரணம் என்பதையும் நாம் அறியோம்.

அதற்கு யார் காரணமாயிருந்த போதிலும் சரியே, அவர்களுக்கு நாம் அறிவுறுத்த விரும்புகிறோம் வேண்டாம் இந்த விபரீதம், வேண்டாம்! திராவிடர் கழகம் மக்கள் உள்ளத்தில் என்றும் அழியாத அன்பு முத்திரையைப் பொறித்துவிட்டது. அதை இத்தகைய சூறாவளிகள் அழித்துவிட முடியாது. மக்கள் மன்றம் மட்டுமே அல்ல, இன்று திராவிட மாணவர் உலகம் முழுவதுமே ஒரு ஈரோட்டுப் பாசறையாக மாறிவருகிறது. அப்படி மாறுவது இயற்கை; மாறவே செய்யும்—அதைத் தடுப்பது விவேகமல்ல; தடுப்பது பயன் தரவும் செய்யாது. வேண்டாம் இந்த வீண் வேலை!

## வரதராசனார் மறைவு

கடலூர் சென்று வெற்றி
களிப்புடன் திரும்பிவந்த வேளை
நெஞ்சைக் கலக்கும் செ
ஒன்று கேட்க நேர்ந்துவிட்டது
கேட்டதும் உள்ளம் குமு
னோம். கல்லூரியி ம் பி
இடங்களிலும் திராவிட மாண
வரை ஆபத்து அணைந்த வேளை
லெல்லாம் அவர்க்குக் கைகொ
டுத்துக் காத்த அருந்துணைவர்–
திராவிட இயக்கத்தின் தொட
க்க காலந்தொட்டு தமிழர் நலன்
கருதி பெரும் பணியாற்றிவரு
பெற்றியினர்—பச்சையப்ப
கல்லூரியில் அறிஞர் அண்ண
துரை பயின்று கொண்டிருந்
வேளையிலேயே அவரைப் பொது
வாழ்வுக்கு முடுக்கிய அவ
டைய ஆங்கில ஆசான்—தமிழ
குலத்தின் தலைவர் பெரியாரிட
தும் அதன் தளபதி அண்ண
விடமும் அசையாத பற்றுடைய
அண்ணல்—பச்சையப்பன் கல்
லூரி ஆங்கிலப் பேராசிரியர் வர
ராசனாரைச் சென்ற கிழமை
இயற்கை நம்மிடமிருந்து பறி
தெடுத்துக் கொண்டுபோய் விட்
டது. திராவிட இயக்கம் என்
றாலே நெஞ்சு நடுங்கி ஒதுங்கி
செல்லும் கோழைகளும், உள்
ளத்தில் வலுவற்ற "ஒட்டை
ஓடிசல்"களும், நெஞ்சில் பட்
டதை நேர்மையில் சொல்லு
உள்ளத்திட்பம் வாய்க்க
பெறாத வாழைமட்டைகளு
தமிழ் உலகத்தில் நிறைந்திருந்
அக் காலத்திலேயே அவர் ந

(12-ம் பக்கம் பார்க்க)




## ...ார் பீகாரிகளுக்கே!

...இன்று பீகாரின் இருதய கீதமாம் ...ம் முழக்கம். வேற்று மாகாணத் ...ர் கூட்டங் கூட்டமாக வந்து, ...ாரில் தங்கி, வாணிபக் கோட்டை ...ள எழுப்பி, பீகாரிகளேயே துரத் ...த் தொடங்கிவிட்டனராம். இது ...ண்டு கொதித் தெழுந்த பீகார் ...ள்ளம் பீகார் பீகாரிகளுக்கே ...ன்று முழங்குகிறதாம். மகாத்மா ...க்கு மனவேதனை தருகிறதாம் ...ந்த வாசகம். ஏனே மனக்கலக் ...ம்? பிறர் சுரண்டல் கூடாது ...ன்பதுதானே உரிமை வேட்கை ...ன் தோற்றுவாய். உரிமை ...வட்கையினின்று எழுவதுதானே ...ட்டுப் பற்று, தியாக உணர்ச்சி, ...அஞ்சா நெஞ்சு, இன்னபிற! அப் ...டி இருந்தும், இந்தியா இந்திய ...க்கே என்ற உரிமை முழக்கத்தை ...ழுப்பிய காந்தியார் அதே தத்து ...த்தினின்றும் கிளர்ந் தெழுந்த ...ார் பீகாரிகளுக்கே என்ற வாச ...த்தைக் கண்டு மட்டும் ஏன் அஞ்ச ...வண்டும்? அது சரியானுல் இது ...ட்டும் எப்படித் தவருகும்? இது ...வருனல் அது மட்டும் எப்படிச் ...ரியாகும்? விளக்குவாரா காந்தி ...ர்?

## ...ண்டக்கூடாது! சுரண்டினுல்—?

"ஒரு மாகாணத்தவர் மற்ருெரு ...காணத்திற் சென்று குடியேறி ...ல் அங்குள்ள மக்களுடனும் ...வர்களுடைய வாழ்க்கை முறை ...னும் இரண்டறக் கலந்து ...வேண்டும். பீகாரி அல்லாத ...ர் பீகாருக்குச் சென்று வாழ் ...ானுல் பீகார் மாகாணத்துக்குத் ...ாண்டு செய்யவேண்டுமே தவிர ...ாரைச் சுரண்டக் கூடாது." ...றுகிறுர் காந்தியார் இதுபோல. ...த்மையான கருத்து! அழகான ...சகம்! மனமார ஒப்புக் கொள் ...ளும், சுரண்டுவது தவறு தான். ஒரு மாகாணத்து மக்கள் மற்ருெரு மாகாணத்தில் நிலேயாகத் தங்குவதாயின் தங்கும் மாகாணத்தவரைச் சுரண்டுவது பெருங் கொடுமை. கொடுமை மட்டுமல்ல, ஏகாதிபத்திய மனப்பான்மையும் ஆகும். ஆகவே சுரண்டத்தான் கூடாது. ஆனுல் நம் கேள்வி சுரண்டலாமா வேண்டாமா என்பதல்ல. சுரண்டுபவர்களைத் தடுப்பது எப்படி என்பதுதான்." எல்லோரும் அன்பு வாழ்க்கை வாழவேண்டும். மன வேறுபாடும் குறுகிய மாகாணப் பித்தும் தொலேயவேண்டும். விரிந்த உள்ளமும் பரந்த மனப்போக்கும் இருக்கவேண்டும். ரோமில் ரோமரைப் போலிருக்கவேண்டும்" என்றெல்லாம் காந்தியார் சொல்வதில் நாமும் எழுத்துக்கு எழுத்து உடன்படுகிறேம். ஆனுல் மீறிச் சுரண்டுபவர்களே என்னசெய்வது? எவ்வளவு சமாதானமாகச் சொல்லியும் சுரண்டலே நிறுத்தாதவர்களே என்ன செய்வது? எங்கள் மாகாணத்தை விட்டு சற்றே விலகி இரும் பிள்ளாய் என்று சொல்ல வேண்டுமா வேண்டாமா? விடை சொல்லுவாரா காந்தியார்? சொல்ல மாட்டார் என்பது நமக்குத் தெரியும். இத்தகைய சில்லறைக் கேள்விகளுக்கெல்லாம் விடை சொல்லிக் கொண்டிருக்க அவருக்கு நேரமேது? நவாகலி போனுல் டில்லி; டில்லி போனுல் பஞ்சாப்; பஞ்சாப் போனுல் கல்கத்தா என்று கலவரப் பட்டியல்தான் நீண்ட வண்ணம் உள்ளதே!

## கேட்டார்—சொன்னுர்!

சென்னே சட்ட மன்றத் தலேவர் ஜே. சிவஷண்முகம் பிள்ளே டில்லி அரசியல் ஆக்கமன்றத்தின் செயலாளருக்குத் தந்திகொடுத்துக் கேட்டாராம், மாகாணங்களுக்கான அரசியல் சட்ட திட்டங்கள் அ. நி. சபையில் நிறைவேற்றப் படு முன்பு மாகாண சட்ட மன்றங்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளும் உத்தேசம் உண்டா என்று. இல்லே என்று பதில் தந்தி கொடுத்தாராம் அ. நி. சபைச் செயலாலர். எவ்வளவு இரத்னச் சுருக்கமான பதில்! விடை பெற்ற சிவசண்முகனுர் மாகாணங்களின் கருத்தறியாமல் மாகாணங்களுக்கான சட்ட திட்டங்களே வகுப்பது அறம் அல்ல ஒழுங்கு முறையும் அல்ல என்று சொல்லி, எங்களேக் கலக்காமல் செய்யப்படும் திட்டங்களே யாம் ஒப்ப மாட்டோம் மாட்டோம் என்று அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்திருப்பார் என்றுதானே எதிர்பார்க்கிறீர்கள்! அதுதான் இல்லே. சிவசண்முகனுர் மவுன விரதம் பூண்டு விட்டார், என்பதாகக் கேள்வி ..... .......டில்லியில் உள்ள அ, நி. சபையினரே! சபாஷ்! அப்படித் தான் செய்ய வேண்டும்! சென்னே மாகாணத்தை வேறு கலக்க வேண்டுமாம் சென்னே மாகாணத்தை! ஏனும்? டில்லி சொன்னுல் கேட்டு அதன்படி நடக்க வேண்டியது தானே சென்னே? கிடக்குது சென்னே, நீங்கள் நடத்துங்கள் உங்கள் காரியத்தை! நடப்பது டில்லி தர்பார் என்பது தெரியவில்லே அதுகளுக்கு! சும்மா துள்ளுகின்றன துள்ளு துள்ளு என்று! அதோ யாரோ ஒரு பாவலர் பாடிக்கொண்டு போகிறுர் —"ஆளப் பிறந்தது டில்லி; அதன் கீழ் கிடக்கப் பிறந்தது சென்னே——" ஆமாம், மறுபடியும் சிவசண்முகனுர் தந்தி அடித்தால் மறு தந்தியாக இந்தப் பாட்டை அடித்து விடுங்கள். என்ன சரிதானு?——

## ஆண்டவன் அருள் புரிவான்!

சென்ற இரண்டு வாரங்களாக, அவனன்றி ஓரணுவும் அசையாது —அவன் காப்பாற்றுவான்; அவனன்றி ஓரணுவும் அசையாது;— அவன் காப்பாற்றுவான் என்று ஓயாது உருத்திராக்க மணிகளே உருட்டியவண்ணம் ஜபம் செய்து கொண்டிருக்கிருராம் திருவாவடுதுறை ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சந்நிதானம் அவர்கள். என்னடா இது ஆதீனம் திடீரென்று மணி மாலேயை உருட்ட ஆரம்பித்து விட்டது என்று மிரண்டுபோய் சிஷ்யகோடி

கள் ஆதீனத்திடம் சென்று விசாரித்ததில் கீழ்க்கண்ட தகவல்கள் கிடைத்தனவாம்:

1. நெல்லை ஜில்லா உழவர் கழகத் தலைவர் ஸ்ரீ மங்களா பொன்னம்பலம் தலைமையில் திருவாவடுதுறை ஆதீன எதிர்ப்புக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது.

2. அப்போது ஆதீனத்தின் எதேச்சாதிகாரம் ஒழியவேண்டுமென்று பலர் வீரவுரை ஆற்றினர்.

3. ஆதீனம் நேரடியாக விவசாயிகளிடம் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், தரகர்கள் தொலைய வேண்டுமென்றும், நாங்குநேரி தாலுகாவில் 50 கிராமங்கள் ஆதீனத்திற்குச் சொந்தமாயிருப்பவை அங்குள்ள குடியிருப்பவருக்குச் சொந்தமாக வேண்டுமென்றும், உழவர்களிடமிருந்து ஆதீனம் பெறும் இனும் மான்யங்கள் ஒழிக்கப் படவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

4. இவ் வேண்டுதல்கட்கு ஆதீனம் இணங்க மறுக்குமாயின் இக்கோரிக்கைகளை நிறைவேற்றுதற்குப் போராட்டம் நடத்துவதென மேற்படி ஆதீன எதிர்ப்புக் கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

5. இப்படியாக வரவிருக்கும் போராட்டத்தில் தன்பக்கம் நின்று போராட திரிபுரம்எரித்தவிரிசடைக் கடவுள் தன் பூதகணங்களை அனுப்ப வேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறார் ஸ்ரீலஸ்ரீ ஆதின கர்த்தா.

---

## ஜமீன் சாய்கிறது !

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்; ஆனால் இது விடுகதை அல்ல. உண்மை.

ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவில் நுழைந்ததால் ஏற்பட்ட விபரீத நிலைமைகளில் இந்த அநீதியும் ஒன்று.

மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் ஆங்கில நாட்டு வர்த்தகக் கோமான்கள் வாணிபஞ் செய்வதற்காக இந்தியக் கண்டத்தில் நுழைந்ததும், நுழைந்த இடத்தில் உட்பூசல் நிறைந்திருக்கக் கண்டு 'வாயடியும் கையடியும் அடித்தடித்து', இந்தியாவின் பெரும் பகுதியைச் சூறையாடியதும் இந்திய வரலாற்றின் பால பாடம். வாணிபம் செய்ய வந்த கிழக்கு இந்தியக் கம்பெனியார் இவ்வண்ணம் ஊர்கள் பலவற்றைக் கைப்பற்றி, அவற்றைத் தம் ஆளுகையில் நிறுத்தியபோது, அந்தப் பகுதிகளின் வரி வசூலிப்பது எப்படி என்ற பெரும் பிரச்சினை அவர்கள் முன் எழுந்தது.

ஆங்கிலேயர் வருகைக்கு முன்னால் இந்திய மன்னர்கள், ஆங்காங்கிருந்த சேனைத்தலைவர்களை, பெரும் பணக்காரர்களை, பெரிய அதிகாரிகளை, தம்மிடம் தோற்று சரணாகதி அடைந்து அடங்கி வாழும் சிற்றரசர்கள் போன்றவர்களை அவரவர்கள் பகுதியில் உள்ள நிலங்களின் சொந்தக்காரரிடமிருந்து நிலவரியை வசூலித்து தம்மிடம் சேர்ப்பிக்கும் வரிவசூல் அதிகாரிகளாக நியமித்தனர். அப்படி வசூலித்த தொகையில் தமது உழைப்பிற்கும் வசூல் செலவுக்குமாக ஒரு சிறு தொகையை அந்த வசூல் அதிகாரிகள் எடுத்துக்கொண்டு மிச்சம் முழுவதையும் மன்னர்களிடம் சேர்த்துவிட வேண்டுமென்பது ஏற்பாடு; நன்றாகக் கவனமிருக்கட்டும், அந்த வசூல் அதிகாரிகளுக்கு அவர்கள் வரி வசூலிக்கும் நிலங்களில் எத்தகைய உரிமையும் கிடையாது —வரி வசூலிக்கும் உரிமை தவிர.

பின்னால் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் இந்திய மன்னர்களுக்கும் இடையே போராட்டங்கள் நிகழ்ந்தபோது, போர் புரிவதற்கு மன்னர்கட்குப் பெரும் பொருள் தேவைப்பட்டது. அப்போது வசூல் அதிகாரிகள் நிலவரியை வசூலிப்பதற்கு முன்னமேயே மொத்தமாக ஒரு குறிப்பிட்ட தொகையை மன்னரிடம் தந்துவிடுவதென்றும் பிறகு வரியை வசூலித்து, வருகின்ற முழுத் தொகையையும் வசூல் அதிகாரிகளே எடுத்துக் கொள்வதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படும் போது இந்தியாவில் நடைபெற்ற பலவித நாடுபிடி சண்டைகளின் காரணமாக இந்தியா எங்கணும் அமைதி குலைந்து, மன்னர்களின் ஆதிக்கம் ஒடுங்கி, தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற நிலை ஏற்பட்டது. மன்னர்கட்குத் தங்கள் நாடு தங்களிடம் நிலைக்குமா ? என்பதே சந்தேகத்திலிருந்தபோது அவர்கள் வரிவசூல் பற்றிப் போதிய கவனம் செலுத்தாதது வியப்பல்ல. இந்தக் குழப்பமான நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, வசூல் அதிகாரிகள், பட்டாக்களைத் திருத்தி எழுதியும், ஏமாந்த உழவர் நிலங்களை ஏய்த்துப் பறித்தும், பட்டாக்களின் புறம்போக்காக இருந்த நிலங்களை சம் பேரில் "பட்டா" செய் கொண்டும், அடுத்திருந்த பல நிலங்களைத் தமதென்று பொ வழக்குச் செய்தும் இன்னும் ப சூழ்ச்சிகள் செய்தும், எந்தெ நிலங்களில் வரி வசூல் உரி தமக்குத் தரப்பட்டதோ அ நிலங்கள் எல்லாம் தமக்கே உரிய என்று சாதிக்கலாயினர்.

ஆங்கிலேயர் ஆளத் தொடங்கி தும், ஆங்கில அதிகாரிகளை கொண்டே நிலவரி தண்டிப் பார் தனர். பட்டாக்கள் பிற தஸ் வேஜிகள் எல்லாம் ஒழுங்காக இ லாமல் சிதைந்து போயிருந்த கா ணத்தாலும், உள் நாட்டுக் குழ பங்களிலும் சண்டைகளிலும் ஒ நிலத்தைப் பலரும் கைப்பற்ற கொண்டு தத்தமது என்று வா டிய காரணத்தாலும் ஆங்கில அ காரிகளால் வரி வசூல் செய் முடியவில்லை. இதே சமயத்தி வசூல் அதிகாரிகள், முன் வந் நிலச் சொந்தக்காரர்கள் (தாங்க தான்) உழவர்கள் அல்ல என் பொய் கூறி ஆங்கிலேயரை ஏமா றினர். மேற்கொண்டு இந்தி சிற்றரசர்களுடன் போர் புரிதற் மேலும் மேலும் பணம் உடனே தேவைப்பட்ட காரணத்தா ஆங்கிலேயர்கள்,வசூல் அதிகாரிக கூறியதைச் சிறிதும் ஆய் தோய்ந்து பாராது ஏற்றுக் கொண் டனர்; வசூல் அதிகாரிகளை நில சொந்தக்காரர்கள் என்று அவசர பட்டு முடிவு செய்து, சட்டத்தில் அதைப் பதிந்து விட்டனர்.

ஆங்கிலேயர், தம் சுய நலத்தை முன்னிட்டு அவசரப்பட்டு ஏற்படு திக் கொண்ட இந்த ஏற்பாடு, நில தின் உண்மை உரிமையாளர்கள கிய உழவர்களைக்கூலிக்காரர்கள கத் தாழ்த்தி விட்டு, வெறும் வசூ அதிகாரிகளை நிலத்தின் சொந் காரர்களாக உயர்த்தி விட்டது.

ஆங்கிலேய துரைமாரி "தயவு" காரணமாக, நியா துக்கு மாறாக நில உரிமை பெ வசூல் அதிகாரிகள்தான் இன் ஜமீந்தார்கள் என்று உலவுப கள். இதில் ஒரு வேடிக்கை ஜமீந்தார் என்ற சொல்லுக் பொருள் நிலத்துச் சொந்தக்கா கள் என்பதல்ல; வசூல் அதிகா கள் என்பதுதான்.

1802ல் ஏற்பட்ட இந்த அ 1847வரை தொடர்ந்து நடைமு

(4-ம் பக்கம் பார்க்க)

பிராயச் சித்தம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்பத்திரியின் ஒரு மூலை ல் வந்ததும் நான் அப்படியே சையாமல் நின்றுவிட்டேன். டே அப்பா! அங்கே எவ்வ வு மாறுதல்கள்! பெரிய பெரிய ரைகள், வெயிலை மறைக்கவும் சி விழாதபடி தடுக்கவும் கட் ப்பட் டிருக்கின்றனவே, ஒரே ளிர்ச்சியாக இருக்கிறதே! நாயாளிகள் கிட்ட ரொம்ப பந் க்கள் இருக்கின்றனரே, நர்சு ள் மற்ற வார்டுகளில் அப்படி ம் இப்படியும் சுற்றிக்கொண் ருப்பார்கள். இங்கே நோயாளி ளின் பக்கத்திலேயே இருந்து வண்டிய உதவிகளைச் செய்து காண்டிருக்கிறார்களே! மற்ற டங்களில் எவ்வளவு கூச்சல்- ங்கே எவ்வளவு அமைதி! ல்வொரு படுக்கையின் அரு லேயும் 'கரெண்ட்' மணிகள்! வற்றையெல்லாம் பார்த்துப் ர்த்துத்திகைத்துப்போனேன்; ப்போது அந்த வழியாக வந்த ருவரைப் பார்த்து, "இதெல் ம் என்ன இடங்கள்?" ன்று கேட்டேன்.

"முத்தம்மா! முத்தம்மா!" ர் கூப்பிடுவது? என்னை ருக்காது. இல்லை, திரும்பவும் தோ கூப்பிடுகிறார்கள். நோயா அம்மா ஒருத்தி என்னைக் ப்பிடுகிறார்களே. உள்ளே பாகலாமா என்று தயங்கி ன்றபோது அந்த அம்மாள் கை ஆட்டி உள்ளே அழைத்தார் ர். யாரிது? தெரிந்த முகமா ருக்கிறதே. ஐயோ! ஜமீந்தார் ம்மாவா? ஏன் இப்படி மாறி ட்டார்கள்? (எனக்குக் கல்யா ம் ஆகாதபோது வக்கீல் ஒரு வீட்டிலே குழந்தைகளைப் ர்த்துக் கொண்டிருந்தேன். ங்கே வரும்போது இவர்கள் ன்னைக் கூப்பிட்டுப் பரிவோடு சி ஏதாவது பணமும் கொடுத்துவிட்டுப் போவார்கள்) ஏன் இப்படி வெளுத்துப் போயிருக்கிறார்கள்? கழுத்திலே ஒரு கட்டு. "என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டார்கள். "ஏன் தெரியாது அம்மா? ஏன் இப்படிப் போய்விட்டீர்கள்?" என்று அலறினேன். "பூர்வ ஜன்ம பாபம் அம்மா. இல்லை, இல்லை. தெரியாதது, இல்லாதது, ஆனதைப்பற்றி ஏம்மா பேசணும். எனக்கு இரண்டு மூன்று வருஷங்களாகவே கழுத்தில் ஒரு வீக்கம் இருந்துவந்தது. ஆனால் ஒரு தொந்தரவும் இல்லாமல் இருந்தது. போன மாதத்தில் அது வலிக்க ஆரம்பித்தது. தங் கத்தாலே என்னைப்போல ஒரு ரூபம் பண்ணி திருப்பியான் உண்டியிலேயும் போட்டுப்பார்த்தேன். வலி தீரவில்லை. இந்த சமயத்தில்தான் ஜமீனில் பெரிய தொல்லை ஏற்பட்டுவிட்டது. உழவர்கள் விளையும் அரிசியில் அதிகப்பங்கு கேட்டனர். "அவர்" கண்டிப்பாக மறுத்துவிட்டார். நானும் அவருக்குச் சொல்லிப் பார்த்தேன். எல்லார்க்கும் இது கஷ்ட காலம். பணக்காரர்கள் லாபத்தில்ஒரு பங்கை ஏழைகளுக்குக் கொடுத்தால்தானே அவர்கள் பொழுது விடியும்?" என்று சொன்னேன். அவர் "அடி போடி பயித்தியக்காரி! இந்த சமாசாரங்கள் எல்லாம் உனக்குத் தெரியாது. இதிலெல்லாம் நம் பிடுவை விடக்கூடாது தெரியுமா" என்று சொல்லிவிட்டார். அவர்கள் பயிரிட மறுத்தனர். ஜமீனில் 144. அதைமீறி ஒரு கூட்டம் நடந்தது. போலீஸ் சுட்டது. அதில் இரண்டுபேர் மாண்டனர். ஒருவன் மனைவி கர்ப்பம் இன்னொருவனுக்கு மனைவி வர இருந்தாளாம். எனக்கு ஒரே மனக்கஷ்டம். இந்நிலையில் என் கழுத்து வலியை அவர்க்குச் சொல்ல எனக்கு மனமில்லை. "எப்படியாவது ராஜியாகப் போங்கள். இதெல்லாம் அடுக்காது" என்றெல்லாம் கூறி அவர் மனத்தை மாற்றினேன். குடியானவர்களும் ஒருவழியாக வேலைக்குத்திரும்பினர். எனக்கும் மன நிம்மதிதான். ஆனால் என் வலி பொறுக்க முடியாதது ஆகிவிட்டது. வாயில் போட்டதை சரியாக முழுங்கக்கூட என்னால் முடியவில்லை. தலையிலெல்லாம் ஏதோ முட்டைபோல் கிளைத்துவிட்டன. காலும் நடக்க முடியவில்லை, இருமலும் வந்துவிட்டது. அவரும் என்னை இங்குக் கொண்டுவந்து சேர்த்தார். குணமும் இல்லை. ஏதோ "காண்ட்" கழுத்திற்கும் தலைக்கும் வைக்கிறார்கள்" என்று தன் சோகக் கதையை எத்தனையோ தடவை நிறுத்தியும், இருமியும், இரத்தம் தோய்ந்த சளியை முழிந்து கொண்டும் சொன்னார்கள். கேட்டுக் கொண்டிருந்த எனக்கு ஏன் இங்கு வந்தோம் என்று ஆகிவிட்டது.

* * *

இரண்டு நாட்கள் ஓடி மறைந்தன. குழந்தை உடம்பு அப்படியேதான் இருந்தது. ஒரு டாக்டரம்மா வந்து குழந்தையைப் பார்த்தார்கள். கலங்கிய கண்களோடு அவர்களைக் கேட்டேன். "என்ன அம்மா குணமே இல்லையே! அங்கே இருக்கிற குழந்தையும் சளி ஜுரம் என்று வந்ததே அம்மா, அதற்கு நாலைக்கு 5, 6 ஊசிபோட்டுக் குணமாக்கி விட்டீர்களே. இதற்கும் அது மாதிரி ஏதாவது செய்யக் கூடாதா?" என்று வேண்டினேன். அவர்கள் "அந்த மருந்து இப்பொழுது ஆஸ்பத்திரியில் இல்லையம்மா அவர்கள்கூட அந்த மருந்தை கடையில் வாங்கித்தான் தருகிறார்கள். உங்களால் முடிந்தால் வாங்கிக் கொடுங்களேன் ரூ. 10-15 ஆகும்" என்றுசொல்லி அந்த மருந்து

பெயரை எழுதிக் கொடுத்தார்கள்.

பணத்திற்கு எங்கு போவது? அவரோ இன்னமும் திரும்பிவரவில்லை. ஜமீந்தார் அம்மாளைக் கேட்கலாமா? கையில் பணம் இருக்குமா என்று அங்கே ஓடினேன். இதென்ன நேற்றுப் பார்த்ததைவிட இன்றைக்குச் சலவைக்கல் மாதிரி வெளுத்துவிட்டார்களே? அம்மா! அம்மா! என்று கூப்பிட்டு நடுங்கிய கைகளால் அவர்கள் கன்னத்தைத் தொட்டுப் பார்த்தேன். ஐயோ! ஏன் இந்த ஜில்லிப்பு? மூக்கில் கைவைத்துப் பார்த்தால் மூச்சில்லை. ஏழைகளுக் கிரங்கிய, ஒரு பணக்கார உள்ளம், மறைந்துவிட்டது! குழந்தையின் கதி என்ன? பணத்திற்கு என்ன செய்வது? அம்மாள் கழுத்தில் தாலி ஒன்று இருக்கிறது. ஐயோ! என்ன கொடுமையான தீர்மானம்! வேறுவழியில்லை. அதை மெதுவாக அவிழ்த்துக் கொண்டேன். "அம்மா நீ என்னை மன்னிப்பாய் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை." என்று மனம் உருகி உள்ளுக்குள்ளேயே கூறிக்கொண்டு யாரும் என் ஈனச்செய்கையைப் பார்க்கவில்லை என்று கண்டுகொண்டு, நகையோடு வீட்டிற்கு ஓடினேன்.

அவர் வந்துவிட்டார். போலீசார் விட்டுவிட்டார்களாம். நம்ப முடியாததை—பிணத்தைத் திருடியதை--நடந்ததைக் கூறினேன். முதலில் நம்பவே இல்லை அவர்! "பரம சாதுவாச்சே நீ! நீயா செய்திருப்பாய் இந்தப் பாதகச் செயலை இருக்கவே இருக்காது" என்றுதான் சொன்னர். பிறகு தாலியைக் காட்டினேன். அசந்து போய்விட்டார் அவர். "ஆச்சரியப் படலாம் அப்புறம்! அங்கே குழந்தை சாகக்கிடக்கிறது! ஓடுங்கள் மார்வாடியிடம் என்றேன்-ஓடினர்-ரூபா 40 பெற்று வந்தார். எங்கள் தாலி, வாங்கி வாங்கி பழக்கப் பட்டுப்போன எங்கள் விரோதி—இல்லை, ஆபத்துக் காலத்தில் தாலியை அடகு வைத்துக்கொண்டு அதன் பேரில் எங்களுக்குப் பணம் கொடுத்துதவிய எங்கள் நண்பன்—மார்வாடி அவர்மீது சந்தேகப்படவில்லை. இது சகஜம் என்று எண்ணினன். பணங் கொடுத்துவிட்டான். மருந்தை வாங்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினேன். டாக்டரிடம் தந்தேன். குழந்தைக்கு ஊசிபோட்டார்கள். பகலில் நான்கு ஊசிபோட்டார்கள். இரவும் தூக்கத்தை விட்டு, நடு நடுவில் வந்து ஊசி போட்டார்கள். மறுநாளும், அடுத்த நாளும் ஊசி மருந்து வாங்கிக் கொடுத்தேன். குழந்தையும் குணம் அடைந்து வந்தது. ஆஸ்பத்திரியில் தாலி போனதைப் பற்றி—அது யார் திருடியதென்று அவர்களுக்குத் தெரியாது. இரகசியத்தில் பேச்சுகள் நடந்துகொண்டிருந்தன. அன்றிரவே தாலி ஒன்று பண்ணி, மறுநாள் அந்த அம்மாளைத் தகனம் பண்ணிவிட்டார்களாம். குழந்தையும் முழுகுணம் அடையவே நான் குழந்தையை எடுத்துக் கொண்டு வீடு திரும்பினேன். திரும்பிச் செல்லும்போது நான் செய்தது சரியா தப்பா என்ற பிரச்சினை என் உள்ளத்தை வாட்டியது. திருடியது தவறுதான், சந்தேகமில்லை. ஆனல் "அந்தச் செய்கையை" நான் செய்திராவிட்டால் என் குழந்தை தவறிப் போய் இருக்குமே, நான் என்ன செய்வேன்! என் செய்கையை எண்ணி எண்ணி வருந்தினேன். இப்போதுகூட அதை நினைத்துக் கொண்டால் என் மனம் பகீரென்கிறது! எனக்கு நன்மை செய்துவந்த உத்தமியின் தாலியைத் திருடினேனே, எவ்வளவு பழிகாரி நான்!

என் குழந்தைக்கு இப்போது நாகம்மாள் என்று பெயர் வை திருக்கிறேன். அது அந்த ஜமீ அம்மாளின் பெயர். ஏன் அ கள் பெயரைச் சூட்டினேன் அது நான் செய்த தவறுக்கு பிராயச் சித்தம் என்று எண்ணி செய்தேனு? அது பிராயச் சி தம்தானு? எனக்கே புரியவில்

## வரதராசனுர் மறைவு

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கத்திற்குப் பெருந்து புரிந்துவந்தார். திராவிட மா வர் இயக்கத்திற்கு அவர் வ கரமென விளங்கினர்; வேண்டுமென்று அவரை நா சென்ற தமிழ்த் தோழர்க நலம் செய்ய அவர் என்றும் நிலையிலும் தவறினரில்லை. மூன் தமிழன் என்று எல்லா தான் இக்காலத்தில் சொல் கொள்கிருர்கள். ஆனல் த னென்று பெருமை பே தருக்கி நிற்கும் இவரெல்லா தமிழர் வாழ்வுக்கு ஆப எனில் தம் சுண்டுவிரலை அசைக்க ஒருப்படார். ஆ மாண்ட வரதராசனுரோ உ மைத் தமிழர்—மறந்தும் தமி பகைவர்க்கு ஆக்கமோ தமிழு குக் கேடோ செய்தறியாத ம தமிழர். அத்தகைய ஒருவ நாம் இழந்தோம், என் செ வோம்! நம் உள்ளத்திற்கு ஆ தல் கூறவே நம்மால் மு வில்லை. பிறர்க்கு எவ்விதம் ஆறுதல் கூறுவோம்; இய ஒரு வரதராசனுரை நம் மிருந்து பெற்றுக் கொண்ட பல வரதராசனுர்கள் நம்மி தோன்றுவாராக.


**போர்வாள்**

திராவிடர் வார வெளியீ

| | | |
|---|---|---|
| தனி இதழ் | ரூபா | 0 1 |
| ஆண்டு 1-க்கு | ,, | 5 0 |

விவரங்களுக்கு:

போர் வாள்

147, பவழக்காரத் தெரு, சென்


Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers, 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hon